**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
🔍 Peer-Reviewed | 🌐 Open Access | 🔗 Crossref DOI & Global Indexing | 📊 Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# The Rhetorical Excellences of Murugan

**Dr. M. Chitrakala*,**
Assistant Professor, Department of Tamil, N.G.M. College, Pollachi.
*Correspondence: chitrababu1996@gmail.com, Tel: 9842250753

**Article Info**
Received on 20-April-2026, Revised on 27-April-2026, Accepted on 28-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

This research paper, titled "The Rhetorical Excellences of Murugan," analyzes through literature the various names of Murugan, his divine grace bestowed upon the people, and the glory of Lord Murugan being worshiped and revered not only in Tamil Nadu but across the world. Although Murugan has more than a thousand and eight names, considering the scope of this study, only specific names have been analyzed: Murugan, Velan, Vetrivel, Arumugan, Karthikeyan, Asurar Kudigedutha Aiyan (the Lord who destroyed the clan of demons), Senthil, Kadamban, Subramanyan, Thagappan Swami, Skandan, and Dhandayudhapani. Notably, the study concludes with a summary and a bibliography of reference books.

***KEYWORDS:*** *Lord Murugan, Tamil Literature, Rhetorical Excellence, Divine Names, Cultural Worship.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Kalanjiyam International Journal of Tamil Studies* **E-ISSN 2456-5148**
Volume 6 | Issue 01, May 2026 Online: www.ngmtamil.in

# முருகனின் சொல்லாட்சி சிறப்புகள்

***முனைவர் ம. சித்ரகலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.
கைபேசி . 9842250753, மின்னஞ்சல் chitrababu1996@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

**"முருகனின் சொல்லாட்சி சிறப்புகள்"** என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் முருகனின் பல பெயர்களையும் அவர் மக்களுக்கு அருள் வழங்கும் சிறப்பினையும் , தமிழகம் மட்டுமல்லாமல் உலகமனைத்தும் முருகக்கடவுளைப் போற்றி வணங்கும் பெருமையையும் இலக்கியங்கள் வாயிலாக ஆராயப்பட்டுள்ளது. முருகனுக்கு ஆயிரத்தெட்டுக்குமேல் பெயர்கள் இருப்பினும் ஆய்வு எல்லை கருதி முருகன், வேலன், வெற்றி வேல், ஆறுமுகன் , கார்த்திகேயன், அசுரர் குடிகெடுத்த ஐயன், செந்தில் , கடம்பன் , சுப்பிரமணியன், தகப்பன் சுவாமி, கந்தன், தண்டாயுதபாணி ஆகிய பெயர்கள் மட்டும் ஆராயப்பட்டுள்ளது. ஆய்வில் நிறைவாக தொகுப்புரையும் துணை நின்ற நூல்கள் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**முன்னுரை**

முருகன் என்ற சொல்லிற்கு அழகன் என்பது பொருள். gz;L njhl;L ,d;W tiu Kufdpd; mUshy; mtdpd; ngah;fs; gythW toq;fg;gLtJ Fwpg;gplj;jf;fJ. முருகனை அதிகம் வழிபடுபவர் தமிழர்கள் என்பதால் முருகனைத் தமிழ்க்கடவுள் என்றும் போற்றுவர். மேலும் முருகனின் இருப்பிடத்தைச் சொல்லும்போது குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமாகக் கொண்டாடுவர். சங்க இலக்கியத்தில் மலையும் மலைசார்ந்த இடமாகத் திகழும் குறிஞ்சி நிலக்கடவுளாக முருகன் போற்றப்படுவதும், முருகனின் ஆறுபடை வீடுகள் பெரும்பாலும் குன்றின்மேல் இருப்பதும் சான்றாகக் கொள்ளலாம். முருகனின் ஒவ்வொரு அவதாரத்திற்கும், அவருடைய அறுபடை வீட்டின் சிறப்பிற்கும், குன்றா அருளுக்கும் முருகனின் பக்தகோடிகள் அவருக்குக் கோடான கோடி பெயர்களைச்சூட்டி மகிழ்வதோடு, ஆடியும் பாடியும் வழிபாடு செய்கின்றனர். அவ்வகையில் அவரது பெயருக்கான புகழையும், அருள் கொடுக்கும் கருணைக்கடலின் அற்புதங்களை உலகுக்குகாட்டும் விதமாக "முருகனின் சொல்லாட்சியும் சிறப்பும்" என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**முருகன்**

முருகன் என்றால் அழகன் என்பது பொருள். முருகு என்றால் அழகு, இளமை என்று பொருள். மேலும் முருகன் என்ற சொல்லுக்கு இளமை "முருகு விம்மிய மொய் குழலேழை" (சீவ.) அழகு, மணம், "முருக மார்புமுரண்கிடக்கை" (பட்டினப். 37), கடவுள்தன்மை, "முருகு மெய்ப்பட்ட புலைத்திபோல"(புறம்.259), தேன் "முருகு வாய்மடுத்து ண்டளிமூசும்" (நைடத. மணம்புரி. 23), என்று பல பொருள்களும் இருக்கிறது. முருகா என்பது மும்மூர்த்திகளும் இணைந்த பெயராக இருப்பதை,

""மு" என்றால் "காக்கும் கடவுள் முகுந்தன்", "ரு" என்றால் "அழிக்கும் கடவுள் ருத்ரன்", "க" என்றால் "படைக்கும் கடவுள் பிரம்மா என்ற காமலோற்பவன்" எனவே முருகனை வழிபட்டால் மும்மூர்த்திகளை வழிபட்டபலன்" கிடைக்கும். ஆகவே முருகன் மாறாத இளமையும், அழியாத அழகும், குறையாத நறுமணமும் நிறைந்த தெய்வத்தன்மையும், தெவிட்டாத இனிமையும் உடையவன் என்பதோடு அவனை வழிபட்டால் மும்மூர்த்திகளை வழிபட்ட பலன்கிட்டும் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மெல்லின, இடையின, வல்லினமெய் எழுத்துக்களுடன் "உ" என்னும் உயிரெழுத்து ஒவ்வொன்றுடனும் சேர்ந்து முருகு என்றாயிற்று. (ம்+உ ,ர். +உ, க் + உ = முருகு) இம்மூன்றும் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி இவைகளைக் குறிக்கும் என்று சொல்கிறார்கள்" (ta.m.wiktionary.org). இவ்வாறு முருகன் உலகனைத்தும் ஆழ்பவனாகக் கருதப்பட்டு வணங்கப்படுகிறான்.

**வேலன்**

வேல் முருகனின் ஆயுதமாக சிறப்பிக்கப்படுவதால் முருகன் வேலாயுதன் என்றும் வேலன் என்றும் வேல் முருகன் என்றும் வெற்றி வேலன் என்றும் அழைக்கப்படுகிறான். வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா என்பது இன்றைய முருக பக்தர்களின் முழக்கமாக விளங்குகிறது. சங்க காலப்பாடல்களில் வேல் ஆயுதமே முருகனின் வடிவமாக இருந்தது. வேல் வைத்து ஆடும் ஆடலை வேலனாடல் என்றும் வெறியாடல் என்றும் அழைப்பர். முருகனின் இயல்பான நறுமணத்தை "வெறி" என்று கூறுவர். முருகனை வழிபடுவோர் தெய்வம் தன்மீது வந்துவெளிப்படும் நம்பிக்கையில் ஆடும்கூத்தே வெறியாடல் என்பதை,

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும் (தொல். பொருள். 63.1.2)
"முருக யர்ந்துவந்த முதுவாய்வேலன் (குறுந். 362)

என்ற நூற்பா விளக்குவதன் வழி வேலன் என்பவன் வெறியாடலின் இயல்பை உணர்ந்தவன் என்றும் வெறியாட்டிற்கு காந்தள் என்று பெயர் உண்டு என்றும் தெளிவாக அறிய முடிகின்றது. வெறியாட்டு நடத்தும் இடத்து முருகன் காதல் தெய்வமாக அருள் கொடுக்கிறான்.

**வெற்றி வேல்**

வேல் என்றவுடன் வெற்றி என்பது வந்துவிடும். முருகன் தன் திருக்கை வேல் கொண்டு அதர்மத்தை அழித்து தர்மம் காத்த சிறப்புத்தன்மையை நக்கீரர்,

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும் துளைத்த வேல் உண்டே துணை"

பாடுகிறார். முருகனின் வெற்றிச்சிறப்பை உணர்ந்த சங்க மக்கள் போருக்கு போகும் முன் முருகனின் வேலினை நீராட்டி, சீராட்டி, பீலிகட்டி, மாலைசூட்டி, மகளிர் சூழ்ந்து மங்கல வாழ்த்தொலி எடுப்ப இன்னிசையான யாழும் கருவியும் பாட, ஊர்வலம் வந்து தூயநீராட்டி வேல்விழா கொண்டாடுவர் என்பதை,

மங்கல மகளிரொடு மாலை சூட்டி இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்

தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து மண்முழு தழுங்கச் செல்வினுஞ் செல்லும் (புறம். 332)

என்ற பாடல்வழி விளக்கி நிற்கின்றது.

வேலை நினைத்தாலே வெற்றி வரும் என்பதை சொன்னால் போதாது அனுபவமே ஆறா மருந்து. அதனை அனுபவித்து உணர்ந்தவர் அருணகிரிநாதர். ”அருணகிரியார் முருகனிடத்திற் கொண்ட பக்தி ஒப்புமை இல்லாதது. கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி பாடிச் சந்தத் திருப்புகழைச் சந்தமும் தொடுத்தணிந்து உருகினவர். அவர் முருகனைப் பாடியதுபோல் வேறு எவரும் பாடி அறியார். வேல்! வேல்! வேல்! என்று விடாது ஓதிக்கொண்டிருப்பார். எந்த நிலையிலும் அவர் வேலை மறந்ததில்லை. ”காமக் கணிகையர் கலவியிற் படினும் நாமவேலின் நன்மந்திரத்தை நாவால் நவில்தல் நான் ஒழியேன்” என்று உள்ளம் திறந்து கூறுகிறார். வேல் என்று ஒரு கால் நினைத்தால் முருகனது இரு காலும் முன்வந்து நிற்கும் என்பது உண்மை. ”வேல் உண்டு வினை இல்லை மயில் உண்டு பயமில்லை” என்பது பழமொழி.

**ஆறுமுகன்**

ஆறு முகங்களை உடையவன் ஆறுமுகன். ஆறு கார்த்திகை பெண்களால்ெ வளர்க்கப்பட்டவன் ஆறுமுகன் என்றும் முருகனின் சொல்லழகு விளங்குகின்றது. சிவபெருமானின் கண்களிலிருந்து வந்த ஒளியிலிருந்து ஆறுமுகங்கள் தோன்றியதால் உருப்பெற்றவன் ஆறுமுகன் எனப் பெயர் பெற்றார் என்பதை,

”வந்திங்கு மலரொனாதி வானவர் கரைத்தல் கேளாப்

புந்திக்குள் இடர் செய்யற்க, புதல்வனைத் தருதுமென்று

அந்திக்கு நிகர் மெய்யண்ணல் அருள் புரிந்தறிஞராயோ ர்

சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகமாறும் கொண்டான்” (திருப்புகழ், பா. 29)

என்று பாடுகிறார். முருகனின் ”ஐந்து முகங்கள் பஞ்ச புதங்களைக் குறிக்கின்றன. ஆறாவது முகம் உயிருள்ள அனைத்து ஜீவன்களுக்குள் இருக்கும் ஆன்மாவைக் குறிக்கிறது. முருகன் அம்மையும் அப்பனுமாக இருப்பவன். ஆகையால், அம்மையின் ஒரு முகமும் அப்பனின் ஐந்து முகமும் சேர்ந்து ஆறுமுகமானான் என்று விளக்கம் உள்ளது” (www.hindutamil.in/news) என்று குறிப்பிடப்பகிறது.

முருகளின் ஆறுமுகங்கள் காட்டும் திசைகளாக"1. ஈசானம் – மேல்நோக்கிய வடகிழக்கு முகம் 2. தற்புருஷம் – கிழக்கு நோக்கியது 3. அகோரம் – தெற்கு நோக்கியது, 4. வாமதேவம் – வடக்கு நோக்கியது 5. சத்தியோசாதம் – மேற்கு நோக்கியது 6. அதோ முகம் – கீழ் நோக்கியது " (திருக்கோயில் வழிபாடு ப. 77) என்பனவாகும். இந்த ஆறுமுகங்களும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் அழகை

"ஏறு மயிலேறி விளையாடும் முகம் ஒன்று,
ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று
கோரும் அடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்று,
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்று
மாறுபட சூரரை வதைத்த முகம் ஒன்று,
வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்று" (திருப்புகழ், பா. 1328)

என்று பாடுகிறார். மேலும் "பக்தர்களில் ஆசைகளைப் பூர்த்திசெய்ய ஒருமுகம், பக்தர்களின் அறியாமையை ஒழித்து அறிவை நிலைநிறுத்த ஒருமுகம், பக்தர்களில் ஆழ்மனதில் புதைந்துள்ள எண்ணங்களை வெளிக் கொண்டுவர ஒருமுகம், யாக யக்யங்களைச் செய்யத் துணை புரிய ஒருமுகம், நல்லவர்களைக் காத்துத் தீயவர்களைத் தண்டிக்க ஒரு முகம் மற்றும் பக்தர்களிடம் அன்பு என்ற சுடரை ஏற்றி இன்பத்தை நிலைநிறுத்த ஒரு முகம்" (மேலது) என ஆறுமுகங்களுக்கும் முருக பக்தர்களுக்கு அருள்கொடுக்கவே என்பது விளங்கும்.

**கார்த்திகேயன்**

சிவபெருமானின் கண்களிலிருந்து வெளிவந்த ஆறு பொறிகள் கங்கையிலுள்ள சரவணப்பொய்கைச் சேர்ந்த பிறகே முருகனாக தோன்றியதால் முருகன் கங்கை மைந்தனாக "**காங்கேயன்**" என்றும் அழைக்கப்படுகிறான். கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்ததால் "**கார்த்திகேயன்**" என்ற பெயர் முருகனுக்கு வழங்கப்படுகிறது. கிருத்திகை நட்சத்திரங்களின் அதிதேவதைகள் வளர்த்ததால் **கிருத்திகன்** என்றும் கிருத்திகை நட்சத்திர நாளில் முருகனுக்கு சிறப்பு பூசைகளும் வழிபடும் பக்தர்கள் கூட்டம் மிகுந்தும் இருப்பதைக் காணலாம்.

**அசுரர் குடிகெடுத்த ஐயன்**

கந்த சஷ்டி கவசத்தில் அசுரர் குடிகெடுத்த ஐயன் என்ற பெயர் முருகனுக்கு வழங்கப்பட்டு வழிபடப்படுகிறது. அதோடு மட்டுமல்லாம் கவசம் என்பது பாதுகாப்பு அணி என்பது பொருள். அதுபோல முருகனின் கந்த சஷ்டி கவசம் முருக பக்தர்களின் பாதுகாப்புக் கவசம் எனலாம். அக்கவசத்தில் ஆயக்கலைகள் 64 நான்கையும் வென்றவன் என்ற விதத்தில் முருகனுக்கு 64 பெயர்கள் இருப்பதை "சரவணபவனார், செங்கதிர் வேலோன், மயில் வாகனனார், மயிலோன்,

மந்திரவடிவேல், வாசவன் மருகா, நேச குறமகன், நினைவோன், ஆறுமுகம், நீறிடும் வேலவன், சிரகிரி வேலவன், சரவணபவனார், வீரா, அசுரர் குடி கெடுத்த ஐயன், இளையோன், சண்முகன், சிவகுகன், முருகவேள், ஏரகச் செல்வன், அழகுவேல், புனிதவேல், கதிர் வேல், நல்வேல், பெருவேல், முனைவேல், செவ்வேல், இனிய வேல், வடிவேல், திருவேல், அருள்வேல், கருணை வேல், முரண்வேல், முனைவேல், எதிர்வேல், கனகவேல், வச்சிரவேல், எதிர்வேல், கனகவேல், வடிவேல், சரபவணபவன், சையொளிபவன், திரிபுரபவன், திகழ்ஒளிபவன் பரிபுரபவன், பவமொழிபவன், அரிதிருமருகா, கந்தகுகன், கதிர்வேலன், கார்த்திகை மைந்தன், இனியவேல், தணிகாசலனக், சங்கரன் புதல்வன், பாலகுமரன், அழகிய வேலன், செங்கல்வராயன், ஆவினன் புதி, வேலாயுதனார், மயிலோன், மலைக்குரு, வாரணத்துவசன், பாலன், தேவராயன்" (கந்த சஷ்டி கவசம்) என்ற பெயர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் அசுரன் குடி கெடுத்த ஐயனாக உருவெடுத்த முருகன் துடிக்கூத்தும் குடைக்குத்தும் ஆடி அசுரர்களை வென்றான் என்ற செய்தியைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. துடிக்குத்து (சிலம்பு.6: 49-51) குடைக்கூத்து (சிலம்பு 6 52-53) கரிய கடலின் நடுவே சூரன் மாமரமாக வேற்று உறுவுடன் நின்றான் அவனது வஞ்சத்தை அறிந்த முருகன் அவனுடன் போரிட்டு வென்றான் வெற்றி களிப்புடன் முருகன் அக்கடலின் நடுவில் அலைகளை அரங்கமாகக் கொண்டு துடியைக் கொடியபடி ஆடிய ஆட்டமே துடிக்கூத்து ஆகும். அவுணர் முருகனுடன் போர் செய்வதற்கு ஆற்றாமல் தன் படைக்கருவிகளை எறிந்து மிகவும் துன்புற்றபோது முருகன் தன் குடையை விரித்து முன்னே சாய்த்து ஆடிய ஆட்டமே குடைக்கூத்து. மேலும் சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பது பழமொழி. அதாவது சஷ்டி விரதம் இருந்தால் கருப்பையில் குழந்தை பாக்கியம் கிட்டும் என்பது பொருள்.

**செந்தில்**

திருச்செந்தூரின் முருகனின் செந்தில் என்ற பெயரால் சிறப்புப்பெற்றது எனலாம். தமிழ்பேராகராதி செந்தில் என்பதற்கு "சிவப்பு மற்றும் வலிமையானவர், புனித சின்னம், செழிப்பான, இளமை, முருகன், வெற்றி என்ற பொருளை விளக்கம் தருகிறது. திருச்செந்தூருக்குச் "செந்தில்" என்ற பெயரும் அலைவாய் என்ற பெயருண்டு. "நாமனூர் அலைவாய்" என்று பொருள் கூறப்படுகிறது. நாமன் என்றால் அச்சம் என்பது பொருள் (தொல். உரி. நூற். 67) கூறப்பட்டுள்ளது. நாமன் என்றால் அச்சத்தை தருபவன் என்று பொருள் தரும். முருகனுக்கு நாமன் என்ற பெயரும் உண்டு. இவன் பகைவர்களுக்கு அச்சத்தை அளிக்கக்கூடியவன். பக்தர்களுக்கு அருள் வழங்குபவன். இலக்கியத்தில் "வெண்டலைப்புணரி யலைக்குஞ் செந்தில் (புறம். 55, 18)என்ற வரிகள் குறிப்பிடுகின்றது. மேலும் செந்தில் முருகனை சிவந்த ஆடை சிவப்பு மலர் கொண்டு செவ்வாய்

கிழமைகளில் வழிபாடு செய்தால் கடன் தொல்லை நீங்கும். ஆக முருகனுக்கு உகந்த செவ்வாடை அணிவது பக்தர்களின் வழக்கம்.

**கடம்பன்**

கந்தா, கடம்பா, கதிர்வேலா, கார்த்திகேயா, என்ற பல பெயர் சிறப்புப் பெற்றவன் முருகன். கடம்பன் என்ற பெயரும் முருகனின் அழகான சொல்லாட்சிக்குரிய பெயராகும். கடம்பன் என்பது ஒரு குடியின் பெயராகவும் மரத்தின் பெயராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. "முருகப் பெருமான், கடம்ப அரசர்களுடன் தமிழ்நாட்டிற்கு வந்த முருகன், இம்முருகப்பெருமான் தண்டை கையில் ஏந்தியவர். கடம்பு மலர்களைத் தோளில் அணிந்தவர்" (myllofamily.com) என்று குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியத்தில் கடம்ப மரம் முருகனுக்கு உரியதாக இருப்பதை, "கடம்பு புலவர் போற்றும் மரம் " (பரி. 19-2) , கடம்பின் சீர்மிகு நெடுவேள் பேணித் தழூஉப் பிணையுஉ (மதுரைக். 614), என்றும் முருகன் திருவிழாவின்போது கடம்ப மரத்தில் கொடி கட்டுவர் என்பதை, " கடம்பு கொடியாத்து, கண்ணி சூடி (அகம். 382-3), என்றும் மணிமேகலையை காமுற்ற உதயகுமாரன் "காரமர் கடம்பன் அல்லன்“ (மணி. 4 -49) என்றும், குறமகள் முருகாற்றுப்படுக்கும் இடங்களின் ஒன்று கடம்பு என்பதை, "புதுப்புங் கடம்ப மரத்தடி" (திருமுரு. 225) என்றும், வெறியாட்டு நிகழ்த்தும் வேலன் கடப்பமலர் அணிந்திருப்பான் என்பதை,"கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி வேலன் வேண்ட (நற். 34) என்றும் குறிப்பிடும்போது முருகன் போர் கடவுளாக மட்டும் இல்லாமல் காதல் கடவுளாகவும் இருந்து அருள்பாலிக்கிறார் என்பது விளங்கும்.

**சுப்பிரமணியன் – தகப்பன் சுவாமி** - கந்தன்

சுக்குக்கு மீறிய மருந்தும் இல்லை சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை என்பது பழமொழி . சுவாமி மலையில் முருகன் தந்தை சிவபெருமானுக்கு பிரணவமந்திரத்தை ஓதி தகப்பன் சுவாமியாக அருள்பாலிக்கிறான்.

கந்தன் என்ற சொல் கந்து – கயிறு, கோல், வரம்பு, தூண் ஆகியவற்றை குறிக்கும். தன்னை வணங்குபவர்களைக் கட்டமைத்துக் காக்கும் கயிறு, கோல், தூண், வரம்பு போல இருந்து காப்பவனாதலால் , "கந்து" போன்ற தன்மைகளை உடைய முருகன் கந்தன் எனப்பட்டான் .கந்தனின் பெருமையை அருணகிரிநாதர் பாடிய சிறப்பை "கந்தபுராணத்தில் இல்லாதது எந்த புராணத்திலும் இல்லை" என்கிறார்கள். கந்தன் பாதம் கனவிலும் காக்கும் என்பது சிறப்பு.

**சேயோன்**

தொல்காப்பியத்தில் முருகன் **சேயோன்** என்று அழைக்கப்பதை,

"சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல், )

என்று கூறுவதன்வழி முருகன் மலைத்தெய்வமாக அருள்பாலிக்கிறான் என்பது விளங்கும்.மேலும் சங்க காலத்தில் காடுறை கடவுளான கொற்றவையின் மகனாக முருகன் அழைக்கப்பட்டான் என்பதை

"காடுகெழு நெடுவேள் பாடுகொளைக்கு ஏற்ப

அணங்கு அயர் வியன்களம் பொலியப் பைய" (அகம் 382)

என்ற வரிகளில் முருகன் நெடுவேள் எனவும் அழைக்கப்படுவது விளங்கும். மேலும் சங்க காலத்தில் முருகனைக் காட்டிலும் சோலைகளிலும், ஆற்றிலும், குளத்தோரங்களிலும், கடம்ப மரத்திலும், அம்பலத்திலும் மரக்கட்டைகளிலும் வணங்கினர் என்பதை,

"காடும் காவும் கவின் பெறு

கந்துடை நிலையிலும்"

என்ற பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

**தண்டாயுதபாணி**

பழனி மலை முருகன் தண்டாயுதபாணியாக காட்சி தருபவர். தண்டு என்ற ஆயுதத்தைக் கையில் கொண்டிருக்கும் முருகன் மாங்கனிக்காகத் தமையன் விநாயகரோடு போட்டியிட்டு தோற்ற கோபத்தில் தண்டாயுதபாணியாக நின்ற திருத்தலம் பழம் நீ. முருகன் தண்டாயுதம் வைத்திருக்கும் சிறப்பை,

"தண்டாயுத முந் திரிசூல மும் பிழத் தாக்கியுன்னைத்

திண்டாட வெட்டி விழ விடு வேன் செந்தில் வேலனுக்குத்

தொண்டாகிய வென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள் " (கந்தர் அலங். பா. 25)

என்று பாடுகிறார். தண்டு வைத்திருப்பது மக்களை இன்னல்களிலிருந்து பாதுகாக்கும் கவசமே என்றும் ஆகவே முருகன் தண்டாயுதபாணியாக காட்சி தருகிறான் என்பதும் சிறப்பு.

**தொகுப்புரை**

முருகன் அருள்கொடுக்கும் அழகால் பல பெயர்களில் அழைக்கப்படுகிறான். ஆகவே முருகன் பெயர்களை ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் சுட்டுவதோடு, தாம் தொழில் செய்யும் நிறுவனங்களுக்கும் வைக்கின்றனர். சிலர் தன் நாவால் முருகன் திருநாமத்தையே எப்போதும் சொல்ல வேண்டும் என்பதற்காக தன் வீட்டு செல்ல பிராணிகள் மற்றும் ஆடு, மாடுகள் போன்றவைக்கும் முருகப்பெருமானின் பெயரை வைக்கின்றனர் என்பது கண்கூடே. . ஆக அனைவரும் முருகன் நாமம் சொல்வோம். வாழ்வில் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அடைவோம்.

**துணை நின்ற நூல்கள்**

[1.] *சீவகசிந்தாமணி* [*Cīvaka Cintāmaṇi*]. பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையர், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 2008.

[2.] கடியலூர் உருத்திரங்கண்ணனார் [Kadiyalur Uruttirangkannanar]. "பட்டினப்பாலை" [*Paṭṭiṉappālai*]. *பத்துப்பாட்டு* [*Pattupāṭṭu*], பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையர், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1986.

[3.] *புறநானூறு* [*Puṟanāṉūṟu*]. பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையர், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1971.

[4.] அதிவீரராம பாண்டியர் [Ativirarama Pandiyan]. *நைடதம்* [*Naiṭatam*]. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1973.

[5.] தொல்காப்பியர் [Tolkappiyar]. *தொல்காப்பியம்* [*Tolkāppiyam*]. இளம்பூரணர் உரையுடன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1967.

[6.] *குறுந்தொகை* [*Kuṟuntokai*]. பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையர், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1962.

[7.] கச்சியப்ப சிவாச்சாரியார் [Kachiyappa Sivachariyar]. *கந்தபுராணம்* [*Kanta Purāṇam*]. வர்த்தமானன் பதிப்பகம், 2012.

[8.] நக்கீரர் [Nakkirar]. "திருமுருகாற்றுப்படை" [*Tirumurukāṟṟuppaṭai*]. *பத்துப்பாட்டு* [*Pattupāṭṭu*], பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையர், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1986.

[9.] இளங்கோவடிகள் [Ilango Adigal]. *சிலப்பதிகாரம்* [*Cilappatikāram*]. அடியார்க்குநல்லார் உரையுடன், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1978.

[10.] சீத்தலைச் சாத்தனார் [Seethalai Sathanar]. *மணிமேகலை* [*Maṇimēkalai*]. பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையர், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1981.

[11.] *நற்றிணை* [*Naṟṟiṇai*]. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரையுடன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1962.

[12.] *அகநானூறு* [*Akaṉāṉūṟu*]. ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரையுடன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1968.

[13.] *பரிபாடல்* [*Paripāṭal*]. பொ. வே. சோமசுந்தரனார் உரையுடன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1969.

[14.] *குறுந்தொகை* [*Kuṟuntokai*]. *(குறிப்பு: வரிசை எண் 6-இல் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது).*

[15.] மறைமலையடிகள் [Maraimalai Adigal]. *திருக்கோயில் வழிபாடு* [*Tirukkōyil Vaḻip◌ாṭu*]. பாரி நிலையம், 1963.

[16.] பாலதேவராய சுவாமிகள் [Baladevaraya Swamigal]. *கந்த சஷ்டி கவசம்* [*Kanta Ṣaṣṭi Kavacam*]. திருமகள் நிலையம், 2015.

Copyright © Author(s), 

[17.] அருணகிரிநாதர் [Arunagirinathar]. *திருப்புகழ்* [*Tiruppukal*]. பதிப்பாசிரியர் வி. எஸ். செங்கல்வராய பிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம், 2004.

[18.] *இந்து தமிழ் திசை [Hindu Tamil Thisai]*. www.hindutamil.in/news. Accessed 26 May 2026.

[19.] *மைலோ பேமிலி [Myllo Family]*. myllofamily.com. Accessed 26 May 2026.

[20.] *விக்சனரி [Wiktionary]*. தமிழ் இணையக் கல்விக்கழகம் / விக்கிமீடியா திட்டங்கள், ta.wiktionary.org. Accessed 26 May 2026.